# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2056, மார்ச் 8, 2025 Weekly E-paper ● March 8, 2025





# மொழி - துணையா, சுமையா ?

சுப.வீரபாண்டியன்

## அனைத்துக் கட்சிக் கூட்டம்: தீர்மானங்கள்!

## தேன்கூட்டில் கைவைக்க வேண்டாம்!

தலையங்கம்

## தமிழ்நாடு மீனவர்களும் வெளியுறவுத் துறையின் அலட்சியமும்!

சாரதாதேவி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2056, மார்ச் 8, 2025 Weekly E-paper ● March 8, 2025


# மொழி – துணையா, சுமையா ?

சுப.வீரபாண்டியன்

தமிழ்நாட்டிற்கு வந்திருக்கும் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா, தமிழ் வழிக் கல்வியியல், மருத்துவ, பொறியியல் கல்லூரிகளை நடத்துமாறு அறிவுரை சொல்லியிருக்கிறார்! அதாவது ஆங்கிலத்தை அகற்றிவிட்டு, முதலில் தமிழ் என்று கூறி, பிறகு இந்தியை அழைத்து வருவது அவர்களின் நோக்கம் ! இந்த மோடி வித்தைகளில் எல்லாம் ஏமாந்து விடாது தமிழ்நாடு !

பாஜக ஆளும் மாநிலங்களிலேயே, தங்களின் தாய்மொழி அழிந்து கொண்டிருப்பதாக – இந்தி அதனை அழித்துக் கொண்டிருப்பதாக – அவர்களின் தலைவர்களே சொல்கிறார்கள். மராத்தியத்தில் அந்தக் குரல் இப்போது வெளிப்படையாகக் கேட்கத் தொடங்கி இருக்கிறது. மாரத்தியை மறந்து விட்டார்கள், மராத்திய மக்கள் இந்திப் படங்களைத்தான் பார்க்கிறார்கள், இந்தியில்தான் பேசுகிறார்கள் என்று பாஜகவினரே புலம்பி இருக்கிறார்கள்.

மேற்கு வங்கத்தில், பாஜக மாநிலத் தலைவர் திலீப் கோஷ், வங்கம் தொன்மையான மொழி, அதனை விட்டுவிட்டு வங்காளிகள் இந்தியில் பேசலாமா என்று கேட்டிருக்கிறார்.

இதுதான் இவர்கள் தாய் மொழியை வளர்க்கும் அழகு ! வடநாட்டில் இருபதுக்கும் மேற்பட்ட மொழிகளை இந்தி அரித்துக் கொண்டும், அழித்துக் கொண்டும் இருக்கிறது என்கின்றனர்.

தாய்மொழி இயற்கையானது ! அதனைத் தாண்டி




பிறமொழிகளைக் கற்றுக் கொள்வது, அவரவர் தேவையை ஒட்டியது ! அப்படிப் பார்த்தால், அனைவரோடும் தொடர்பு கொள்ள, ஆங்கிலம் என்னும் மொழி, இந்தியாவிலும், வேறு உலக நாடுகளுக்குச் செல்லும் போதும் போதுமானதாக இருக்கிறது! இந்த நிலையில் எல்லோரும் மூன்றாவது மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டிய தேவை இப்போது எங்கிருந்து எழுகிறது?

தேவையை ஒட்டி மொழிகளைக் கற்றுக் கொண்டால், மொழி துணையாக இருக்கும் ! தேவையற்று மொழிகளைக் கற்றுக் கொள்ளத் தொடங்கினால், அதுவே சுமையாக மாறிவிடும்!

தான் இந்தியை எதிர்க்கவில்லை என்று ஆந்திர மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு கூறியிருந்தாலும், இரு மொழிக் கொள்கையால் தமிழ்நாடு முன்னேறி இருக்கிறது என்பதை வெளிப்படையாகவே ஒப்புக் கொண்டிருக்கிறார்.

தமிழ்நாட்டின் மீதும், பிற மாநிலங்களின் மீதும் இன்னொரு மொழியைத் திணிப்பதை கைவிட்டு விட்டு, தமிழ்நாட்டைப் பின்பற்றி எல்லா மாநிலங்களிலும், அவரவர் தாய்மொழி மற்றும் உலகத் தொடர்புக்கு ஆங்கில மொழி என்னும் நிலையை ஒன்றிய அரசு கொண்டுவருமானால், தமிழ்நாட்டைப் போல இந்தியாவும் விரைந்து முன்னேறும் ! ●

## மார்ச் 7, பேராசிரியரின் நினைவுநாள்



தனிநபர்களைவிட தத்துவமே பெரியது.
ஏற்றுக் கொண்ட தலைமையே வலிமை மிக்கது.
தன்மானமே உயிருக்கு நிகரானது.
எனும் லட்சியப்பாடத்தை எம் தலைமுறைக்குக் கற்பித்த எங்கள் இனமானப் பேராசிரியரே
வீரவணக்கம்!

–சுப.வீரபாண்டியன்

# அனைத்துக் கட்சிக் கூட்டம் : தீர்மானங்கள்!




நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு, மாநில உரிமை காக்க 05-03-2025 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் கூட்டப்பட்ட அனைத்துக் கட்சிக்கூட்டத்தில், முதல்வர் மாண்புமிகு ஸ்டாலின் அவர்களால் முன்மொழியப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :

1) இந்திய நாட்டின் கூட்டாட்சி அமைப்பிற்கும், தமிழ்நாடு மற்றும் தென்னிந்திய மாநிலங்களின் அரசியல் பிரதிநிதித்துவ உரிமைக்கும் மிகப்பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய மக்கள்தொகை அடிப்படையில் நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பை, இந்த அனைத்து கட்சிக் கூட்டம் ஒரு மனதாகக் கடுமையாக எதிர்க்கிறது.

2) நாட்டின் நலனுக்காக மக்கள்தொகைக் கட்டுப்பாட்டை முனைப்பாக செயல்படுத்திய ஒரே காரணத்திற்காக, தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் குறைக்கப்படுவது நியாயமற்றது.

3) மக்கள் தொகைக் கட்டுப்பாட்டை அனைத்து மாநிலங்களும் ஊக்குவிக்கும் வகையில் 1971–ஆம் ஆண்டு மக்கள்தொகை அடிப்படையிலேயே நாடாளுமன்றத் தொகுதி வரையறை செய்யப்படும் என்று கடந்த 2000 ஆம் ஆண்டின் அன்றைய பிரதமர் உறுதியளித்தவாறு, தற்போதும் இந்த வரையறை 2026 இல் இருந்து அடுத்த 30 ஆண்டுகள் நீட்டிக்கப்படும் என நாடாளுமன்றத்தில் பிரதமர் உறுதி அளிக்க வேண்டும்.

4) நாடாளு மன்றத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கை உயர்த்தப்படும் பட்சத்தில் 1971 ஆம் ஆண்டு மக்கள்தொகை அடிப்படையில், தற்போது நாடாளு மன்றத்தின் இரு அவைகளிலும் (மக்களவை / மாநிலங்களவை) மாநிலங்களுக்கு இடையே எந்த விகிதத்தில் தொகுதி எண்ணிக்கைகள் உள்ளதோ, அதே விகிதத்தில் தென் மாநிலங்களின் தொகுதிகளை உயர்த்த அரசியல் சட்டத் திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்துகிறோம்.

5) மேலும், தொகுதி மறுசீரமைப்புக்குத் தமிழ்நாடு எதிரானதாக இல்லை. அதே சமயத்தில் கடந்த 50 ஆண்டுகளாக சமூகப் பொருளாதார நலத்திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்தியதற்கான தண்டனையாகத் தொகுதி மறுசீரமைப்பு அமைந்துவிடக் கூடாது என்று அனைத்துக் கட்சிக் கூட்டம் வலியுறுத்துகிறது.

6) தமிழ்நாட்டின் குறைந்தபட்ச கோரிக்கைகளாக அனைத்துக்கட்சிக் கூட்டம் முன் வைக்கும் கோரிக்கைகளையும், அவை சார்ந்த போராட்டங்களை முன்னெடுத்துச் செல்லவும், மக்கள் மத்தியில் பிரச்சனைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திடவும் தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய "கூட்டு நடவடிக்கைக் குழு" ஒன்றை அமைத்திடவும், அதற்கான முறையான அழைப்பை மேற்படி கட்சிகளுக்கு அனுப்பி வைக்கவும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது."

## பேரவையில் 16ஆம் செயற்குழு




திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் 16 ஆம் மாநிலச் செயற்குழுக் கூட்டம் 01-03-2025 சனியன்று பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் அவர்கள் தலைமையில் சென்னை வளசரவாக்கத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

1) எதிர்வரும் ஏப்ரல் 26,27 ஆகிய நாள்களில்,கோவையில், பேரவையின் சார்பில் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு மாநில மாநாடு நடத்துவது என்றும், அதில் சிறப்பு அழைப்பாளராக, மாண்புமிகு தமிழ்நாடு துணைமுதல்வர் அவர்களை அழைப்பது என்றும்,

2) எதிர்வரும் ஜூலை 27 அன்று மதுரையில் பேரவையின் பொதுக்குழு நடத்துவது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !

# கருஞ்சட்டைத் தமிழர்

## தேன்கூட்டில் கைவைக்க வேண்டாம்!

"தாய்மொழி என்பது தேன்கூடு" தொட்டால் விபரீதமாகிவிடும் என்று எச்சரிக்கிறார் தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் அவர்கள்.

இந்திமுலாம் பூசப்பட்ட சமஸ்கிருதத்தை நுழைக்கப் பார்க்கிறார்கள் வடவர்கள்.

மத்திய இந்தியாவில் நாடக மொழியாக இருந்த 'சௌரசேனி' மொழியை, பிராகிருத வழியில் கி.மு.5 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகச் சொல்லப்படும் 'பாணினி' என்பவரால் திருத்தி, செம்மை செய்து 'அஷ்டாத்தியாயி' என்ற நூலின் மூலம் கொடுக்கப்பட்டதே சமஸ்கிருதம். அதே சௌரசேனி மொழி தேவநாகிரி மூலம் 'கடிபோலி' வழியாக வந்தது இந்தி, இது காலத்தால் பிந்தையது.

அதேசமயம் முதல் கடல்கோளால் அழிந்த பஃறுளி ஆற்றங்கரையில் இருந்த தென்மதுரையில் முதல் தமிழ்ச் சங்கத்தை நிறுவினான் நிலந்தரு திருவிற் பாண்டியன் நெடியோன், 10,000 ஆண்டுகளுக்கு முன்னர், இது வரலாறு.

தேன் கூடான தமிழுக்காக 1937 முதல் போராட்டக்களம் கண்டும், உயிர்களைக் கொடுத்தும் மொழிகாத்து வருபவர்கள் தமிழர்கள்.

தமிழர்களின் தாய் மொழி காக்கும் போராட்டங்களால் கன்னடத்தில் 1980-83, 2017-19 களிலும், கொங்கணியில் 1986, ஜார்கண்ட்டில் 2022 ஆகிய ஆண்டுகளில் தாய்மொழி காக்க மொழிப் போராட்டங்கள் நடந்துள்ளன.

இவைகளை எல்லாம் கவனத்தில் கொள்ள வேண்டுவது அவசியம்.

*"எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின், எண்ணுவம் என்பது இழுக்கு"* என்கிறார் பெரும் புலவர் வள்ளுவர்.

தேன்கூட்டில் கைவைத்து மீண்டும் ஒரு மொழிப்போருக்கு வழிவகுக்காமல் இருப்பதே ஜனநாயக அரசு என்பதை ஒன்றிய அரசு உணர வேண்டும்.

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
உதவி ஆசிரியர்கள்:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**
வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408



01-03-2025 அன்று முற்பகல் பேரவை அலுவலகத்தில் சென்னை மாவட்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் சென்னை மாவட்டப் பகுதிப் பொறுப்பாளர்களாக 1) கோடம்பாக்கம்: சுந்தர், 2) திருவொற்றியூர்: விமலநாதன், 3) வேளச்சேரி: கருணாகரன், 4) அசோக் நகர்: கிருஷ்ணவேல், 5) அண்ணாநகர்: கவி. தென்னரசு, 6) வளசை கணேசன் ஆகியோர் பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

# தமிழ்நாடு மீனவர்களும்

# வெளியுறவுத் துறையின் அலட்சியமும்!

சாரதாதேவி

ஒன்றியத்தில் பாரதிய ஜனதா அரசு பதவியிலிருந்த கடந்த பத்தாண்டுகளில் 3,656 தமிழ் நாட்டு மீனவர்களைக் கைது செய்தும், 611 விசைப் படகுகளைப் பறிமுதல் செய்தும் இருக்கிறது இலங்கை அரசு. கடந்த நவம்பர் வரை மட்டும் 736 முறை மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று இந்திய வெளியுறவுத் துறையே ஒப்புக் கொண்டுள்ளது. தாக்குதலில் கைப்பற்றப்பட்ட படகுகளை இலங்கை அரசு ஏலம் விடுவதாகவும், சிறையிலிருந்து விடுதலைபெற மீனவர்களுக்குப் பெரும் தொகையை அபராதமாக விதிப்பதாகவும் மீனவர்கள் தமிழ் நாடு முதல்வரிடம் முறையிட்டிருக்கிறார்கள்.

பிப்ரவரி 28 முதல் பலகட்ட போராட்டங்களை அறிவித்து மீனவர் சங்கங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனால் 35 கோடிக்கும் மேல் வர்த்தகம் பாதிக்கப் பட்டுள்ளது. அண்மையில் நாகப்பட்டினத்துக்கு பலவளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைக்கச் சென்ற முதல்வர், இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்பட்ட விசைப் படகுகளுக்கு நிவாரணத் தொகையை 6 லட்சத்திலிருந்து 8 லட்சம் வரை உயர்த்திக் கொடுக்கவும், இலங்கைச் சிறையில் உள்ள மீனவக் குடும்பங்களுக்கு வழங்கப்படும் நாளொன்றுக்கான உதவித் தொகையை 350 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக உயர்த்திக் கொடுக்கவும்



உத்தரவிட்டிருக்கிறார். இதை அடுத்து தலை நகர் புதுதில்லிக்குச் சென்று ஒன்றிய அரசுடன் பேச்சு வார்த்தை நடத்த தமிழ் நாட்டின் அமைச்சர்களுடன் மீனவர்கள் சங்கத் தலைவர்களும் செல்ல இருப்பதால் போராட்டத்தை நிறுத்தி இருக்கின்றனர் மீனவர்கள். 2010 முதல் இருதரப்பு மீனவர்களுக்கும் இடையே நடத்தப்பட்டு வந்த பேச்சு வார்த்தைகள் இப்போது நடைபெறுவதில்லை என்று சொல்கிறார் முதல்வர்.

கச்சத் தீவு கொடுக்கப்பட்டது காங்கிரசு அரசின் தவறு என்று அரசியல் பேசி, நாங்கள் வந்தால் எல்லாவற்றையும் சரிசெய்து விடுவோம் என்று ஆட்சிக்கு வந்த ஒன்றிய பா.ஜ.க அரசு, தமிழ் நாட்டு மீனவர்களை இந்திய மீனவர்களாகவே பார்ப்பதில்லை. வடநாட்டின் ஊடகங்கள் கூட அவர்களைத் தமிழக மீனவர்கள் என்று சொல்கிறதே ஒழிய, இந்திய மீனவர்கள் எனச் சொல்வதில்லை. தமிழ்நாடு என்றால் தனிநாடு போலத் தானே வடக்கில் தெரிகிறது? அதனால் தான் இந்தச் சிக்கல் வளர்ந்து கொண்டே இருக்கிறது. கச்சத் தீவை ஒரு ராஜ தந்திரமாக, தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் புறந்தள்ளி, இலங்கைக்கு விட்டுக் கொடுத்தது இந்திய அரசு. அது யாருடைய ஆட்சியாக இருந்தாலும், அதனால் இன்றும் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகும் தமிழ் நாட்டு மீனவர்களுக்கு ஒரு நல்ல தீர்வை உருவாக்கித் தரும் பொறுப்பு இப்போது ஆட்சியில் இருக்கும் ஒன்றிய அரசுக்கும், வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கும் இருக்கிறது.

இலங்கை அரசுடன் பேசி, இரு தரப்பையும் பேச்சு வார்த்தைக்கு உட்படுத்தி, அமைதிக்கான தீர்வுகளை எட்ட இந்திய அரசு எதுவும் செய்யாமல் பல பத்தாண்டுகளாக, தமிழ் நாட்டு மீன்வர்களை வஞ்சித்து வருவதை முதல்வர் தெளிவாகப் பேசி இருகிறார். தாயுள்ளத்தோடு மீனவர்களின் குறைகளைக் கேட்டறிகிறார். அவர்களின் பகுதிகளுக்கே சென்று ஆய்வு செய்கிறார். கடும் நிதி நெருக்கடியிலும், உதவிகளைச் செய்கிறார். அமைச்சர்களையும் அதிகாரிகளையும் ஒன்றிய அரசிடம் பேச்சு வார்த்தைக்கு அனுப்புகிறார். மீனவர்களின் பிரச்சனை சுமுகமாகத் தீரவேண்டும் என்கிறது தமிழ்நாடு அரசு.

ஒன்றிய அரசு மீனவமக்களின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்ற உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். ●




Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian